



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி CycloneFengal ஃபெஞ்சல் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கோட்டகுப்பம் நகராட்சியில் வனத்துறை அமைச்சர் முனைவர் க பொன்முடி மருத்துவ முகாம், காப்பகங்கள், பேரிடர் மேலாண்மை கட்டிடம் மற்றும் கடல் சீற்றங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அரசு அதிகாரிகளுடன் ஆலோசித்தார்.. மாவட்ட ஆட்சியர் சி பழனி, மாவட்ட எஸ்பி, தீபக்சுவாட்ச், சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா .இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் , மாவட்டத் துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.பாஸ்கரன், கோட்டகுப்பம் நகர மன்ற தலைவர் எஸ்.எஸ்.ஜெயமூர்த்தி, ஒன்றிய செயலாளர் பி. கே.டி முரளி, மைதிலி ராஜேந்திரன், மீனவரணி மணி, மருத்துவரணி வினோ பாரதி, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு உள்ளிட்ட மாவட்ட, , ஒன்றிய, நகர, நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்...



கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது பிறந்தநாளை முன்னிட்டு, நவம்பர் 27ந் தேதி புதுக்கோட்டை அரசு இராணியார் மருத்துவமனையில் பிறந்த 23 குழந்தைகளுக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் தங்க மோதிரத்தை புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வழங்கினார்.இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை மாநகர செயலாளர் ஆ.செந்தில், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, த.சந்திரசேகரன், அரு.வீரமணி, கே.ஆர்.என். போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம். லியாகத் அலி, சு.சண்முகம், என்.சாத்தையா, தவ. பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், ஆர்.ஆர்.சாமிநாதன், அ.ரெத்தினம், எம்.எம்.பாலு, செந்தாமரை பாலு, பூங்குடி எம்.சிவா, வி.என்.எம்.பாலமுருகன், சி.அரங்கநாயகம், மு.கலைஞர் கருணாநிதி, அன்சாரி பாஷித், துவாரை டி.செல்வம், மா.மணிவேல், பழனிவேலு, மழையூர் ராமசாமி, டி.அப்புக் காளை, பெ.தெய்வானை, கி.சுப்ரமணியன், காதர் கனி, வடவாளம் க.செ.மணிமாறன், செ.ரமேஷ், எம்.கே.அறிவுடைநம்பி, பி.கே.வெங்கடேசன், முரளி, இதயம் அப்துல்லா, ராமச்சந்திரன், கண்மணி சுப்பு, விஜயக்குமார் உள்ளிட்ட கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### வேளச்சேரி – விஜயநகரில் – அறுந்து விழுந்த

# மின் கம்பியை மிதித்து உயிரிழந்தவர் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிதியுதவி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச. 1 –

சென்னை மாவட்டம், வேளச்சேரி விஜயநகரில் அறுந்து விழுந்த மின் கம்பியை மிதித்து உயிரிழந்த வி. சக்திவேல் குடும்பத்திற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 5 லட்சம் ரூபாய் நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

சென்னை மாவட்டம், வேளச்சேரி விஜயநகர் முதல் பிரதான சாலை, இரண்டாவது குறுக்குத் தெருவில் சக்திவேல், (த.பெ.விநாயகம், வயது) 47 என்பவர் நேற்று (30.11.2024) மாலை சுமார் 05.30 மணியளவில் பெஞ்சல் புயல் காரணமாக பலத்த காற்று மற்றும் கனமழையால் எதிர்பாராத விதமாக அறுந்து விழுந்த மின் கம்பியை மிதித்து உயிரிழந்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

சக்திவேல் அவர்களின் மறைவுஅவரது குடும்பத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு மின்சார வாரியம் சார்பாக ஐந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

# கிருஷ்ணகிரியில் பொதுமக்கள் - மாணவ - மாணவிகளுக்கு நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

கிருஷ்ணகிரி, டிச. 2 -

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் துணை முதல்வர் பிறந்த நாளையொட்டி கேக் வெட்டி, பள்ளி மாணவ, மாணவிகள் பொதுமக்கள் மற்றும் ஓட்டுனர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. வழங்கினார்

திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணைமுதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி கிருஷ்ணகிரி நகர தி.மு.க. சார்பாக நகர் மன்ற தலைவர் பரிதாநவாப் தலைமையில் கிருஷ்ணகிரி ரவுண்டானா அருகே மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் எம்எல்ஏ 48 கிலோ கேக் வெட்டி, அரசு பள்ளிகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு வெள்ளி நாணயம் பரிசு வழங்கி, 2000 பெண்களுக்கு புடவைகளை வழங்கி, ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடைகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பின்னர்

பர்கூரில் பேரூர் கழக செயலாளர் வெங்கடப்பன் ஏற்பாட்டில் பார்வையற்றோர் பள்ளி மற்றும் மனநல குன்றியோர் பள்ளிகளில் கேக் வெட்டி இனிப்புகள் வழங்கியும் அறுசுவை உணவை வழங்கினார் .

காவேரிப்பட்டணம் பேருந்து நிலையத்தில், பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் கலந்து கொண்டு, இரண்டாயிரம் பேருக்கு பிரியாணி, ஆட்டோ ஓட்டுநர்கள், தூய்மை நலப்பணியாளர்கள் 300 பேருக்கு சீருடை வழங்கினார். அப்போது அவர் பேசுகையில் விளையாட்டு துறை அமைச்சராக பொறுப்பேற்ற பின் அந்த துறையை முன்னேற்ற அரும்பாடு பட்டு வருகிறார் திறமைமிக்க விளையாட்டு வீரர்களையும் ஊக்கப்படுத்தி வருகிறார் என அவர் பேசினார். இந்த நிகழ்ச்சியில்

இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில விவசாய துணை செயலாளர் வெங்கடேசன் மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி , சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி ,பொருளாளர் கதிரவன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கிருபாகரன் ,செந்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம், நாகராசன் , சித்ரா சந்திரசேகர், கோதண்டன், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், ராஜேந்திரன், அறிஞர்,தேங்காய் சுப்பிரமணி, குண. வசந்தரசு, நரசிம்மன் ,ரஜினி செல்வம் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி பல்வேறு நலத்திட்ட உதவிகளுடன் பிரியாணி லிருந்து வழங்கி கொண்டாடி வருகின்றனர் இதன் ஒரு பகுதியாக ஏராளமான திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.




கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பல்வேறு இடங்களில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் கேக் வெட்டி ,அறுசுவை உணவுகள் வழங்கியும் பள்ளி மாணவ மாணவிகள் பொதுமக்கள், ஓட்டுனர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடினர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர்,கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கௌதம் ஏற்பாட்டில் இலக்கியம்பட்டி ஊராட்சி துவக்கப்பள்ளியில் உள்ள மாணவ,மாணவியர்களுக்கு,நோட்டு, பேனா,உள்ளிட்ட உபகரணங்களை தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி வழங்கினார்.உடன் மாவட்ட பொருளாளர் வே. தங்கமணி,தர்மபுரி மேற்கு ஒன்றிய செயலாளர் டி.எல்.காவேரி,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் என்.பி.பெரியண்ணன்,ஒன்றிய அவைத்தலைவர் செல்வராஜ், பொருளாளர் தண்டபாணி,ஐ.டி. விங் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் உதயசூரியன்,விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் ஹரிவிக்னேஷ்,மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.பி.என். மாயன்

**டிசம்பர் 1 (2013)**



கொடைக்கானல் நகரச் செயலாளராக தொடர்ந்து 38 ஆண்டுகள் சிறப்புறப் பணியாற்றியவர். திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

‘மிசா’ சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறை வாசமும் – இந்தி எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, ஈழத் தமிழர் ஆதரவு ஆகிய போராட்டங்கள் மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

கொடைக்கானல் நகராட்சி, நகரியக் குழு உறுப்பினராகவும், கொடைக்கானல் கூட்டுறவு பண்டகசாலைத் தலைவராக இரண்டு முறையும் – கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில்

# அ.தி.மு.க., நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் 200 க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி முன்னிலையில்

நாமக்கல், டிச. 2 -

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் அதிமுக மற்றும் நாம்தமிழர் கட்சியில் இருந்து விலகியவர்கள் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் முன்னிலை வகித்தார்.

இதில் மோகனூர் பேரூர் பகுதியில் இருந்து அ.தி.மு.க. மற்றும் நாம் தமிழ் கட்சியில் இருந்து விலகி திமுகவில் இணைந்தனர். நாம் தமிழர் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் வினோத்குமார், நகர செயலாளர் செந்தில், மகளிர் பாசறை வள்ளி ஆகியோர் தலைமையில் 200க்கும் மேற்பட்டோர் நாம் தமிழர் கட்சியில் இருந்து விலகி நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மோகனூர் பேரூர் கழகச் செயலாளர் செல்லவேல் (எ) சி. செல்லப்பன் ஆகியோர் முன்னிலையில் தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் எம்.பி. சால்வை அணிவித்து வரவேற்றார்.

இதைத் தொடர்ந்து உறுப்பினர் படிவங்கள் புதியதாக இணைந்தவர்களுக்கு அவர் வழங்கினார். அப்போது அவர் பேசுகையில், நாம் தமிழர் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் வினோத்குமார், நகர செயலாளர் செந்தில், மகளிர் பாசறை வள்ளி உள்ளிட்ட 75 பேர் நாம் தமிழர் கட்சியில் இருந்து விலகி திமுகவில் இணைந்துள்ளனர். அவர்களை வரவேற்கிறேன் என்றார்.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட அவைத்தலைவர் மணிமாறன், ஒன்றிய செயலாளர்கள் வி.கே. பழனிவேல், பெ.நவலடி, நாமக்கல் மேற்கு நகர செயலாளர் சிவக்குமார், மாநகர மேயர் து.கலாநிதி, மூத்த வழக்கறிஞர் அறிவழகன், முன்னாள் மாவட்ட அவைத்தலைவர் உடையவர், மோகனூர் பேரூராட்சி தலைவர் வணிதா, துணைத் தலைவர் சரவணகுமார், சார்பு அணி நிர்வாகிகள் கிருபாகரன், ஆனந்த்பாபு, பொன் சித்தார்த், அகிலன், சுகுமார், நிர்வாகிகள் வரதராஜன், ரவிச்சந்திரன், காமராஜ், சந்திரசேகர், சேகர், மணிகண்டன், உதயபானு, ராஜமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன். குணசேகரன்

**டிசம்பர் 1 (2021)**



மாணவப் பருவத்திலேயே, மாணவர் அணியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், என்.மோட்டூர் கிளைச் செயலாளர், நான்கு முறை மத்தூர் ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

மத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

சமூக சேவையாற்றியதன் காரணமாக ‘சமூக விருதுகள்’ பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**